# தலைவி

இணைந்த கரங்கள்
பெண்கள் விழிப்புணர்ச்சி
இணையங்களின் ஒன்றியம்
செய்திமடல்

செங்கோல் 1 மன்றம் 12 ஒக்டோபர் 2003

## தலைவியின் பார்வையில்............

இது தலைவியின் 12வது இதழ். ஆம் சகோதரிகளே தலைவி தனது வாழ்க்கையில் ஒரு வயதைப் பூர்த்தி செய்கின்றாள். எங்கள் மத்தியில் ஆயிரமாயிரம் அரசியல் மற்றும் சமூகத் தலைவிகளை உருவாக்கும்வரையும் இவள் தனது சேவையைத் தொடரவேண்டுமென்பதே எங்களது அவா. அந்தச் சேவையை இன்னும் கூரிய முறையிலும் பொருத்தமான வகையிலும் இச்செய்தி மடல் உங்களுக்கு வழங்குவதற்கு நீங்கள்தான் உதவவேண்டும். தலைவி செய்தி மடலைப் பற்றிய உங்களது கருத்துக்களையும் விமர்சனங்களையும் முன்வையுங்கள்.

உங்கள் கருத்துக்களைப் பெற உதவும் முகமாகவும், தலைவி செய்தி மடலின் பன்னிரண்டாவது இதழை நினைவு கூரும் முகமாகவும் இந்த இதழுடன் நாம் ஒரு கேள்விக் கொத்தினை உங்களில் பலருக்கு அனுப்பி வைக்கின்றோம். தலைவியை எவ்வகையில் நீங்கள் உபயோகிக்கின்றீர்கள், யார் யாருக்கு வினியோகம் செய்கின்றீர்கள், அது இன்னும் என்னென்ன வகையில் முன்னேறலாம் என்று பலதரப்பட்ட கேள்விகளை நாம் அதில் கேட்டிருக்கின்றோம். கேள்விக் கொத்து கிடைத்தவர்கள் தாமதம் செய்யாது அதனைப் பூர்த்தி செய்து அனுப்பி வையுங்கள். தலைவி தான் முன்னேற உங்கள் கருத்துக்கள் உதவட்டும். தவிரவும், இந்த இதழில் நாம் பெண்களுக்கு முக்கியமாக இருக்கும் ஒரு விடயத்தைப் பற்றியும் விபரங்கள் தந்திருக்கின்றோம்.

எங்கள் சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளையும் சவால்களையும் தீர்ப்பதற்கு அவற்றின் இரண்டு அடிப்படையான காரணிகளை நாங்கள் களைய வேண்டும். ஒன்று, அரசியல், அரச நிறுவனங்கள், ஊடகத்துறை போன்ற பொதுத் தளங்களில் தீர்மானம் எடுப்போராக அவர்கள் சமபங்கு வகிக்க வேண்டும். இரண்டு, பெண்கள் மீதான வன்முறை ஒழிக்கப்பட வேண்டும். இவையிரண்டினையும் நாம் எய்தி விட்டோமெனில் பெண்கள் தொடர்பான பிரச்சனைகள் பெரும்பாலான வற்றிற்குத் தீர்வு கண்டவர்களாவோம். இதன் காரணமாகத்தான் இணைந்த கரங்கள் உருவாக்கப்பட்டபோது எங்களில் பலர் அதன் இலக்குகளை பின்வருமாறு வகுத்தோம்:

1) அரசியலில் பெண்கள் சமபங்காற்ற வழிவகைகள் செய்தல்.
2) பெண்கள் மீதான வன்முறையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் சமூகத்தின் சகல மட்டங்களிலும் அதைப் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தல்.

அரசியலில் பெண்கள் சமபங்கு வகிக்கும்போதுதான் சமூகத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் மத்தியில் நீதியை நிலைநாட்டும் சட்டங்களையும் கொள்கைத் திட்டங்களையும் அவர்களால் செயற்படுத்த முடியும். சட்டங்களும் கொள்கைத் திட்டங்களுமே பெரும்பாலும் எங்கள் வாழ்நிலைகளைத் தீர்மானிக்கின்றன. சமூக உறவுகளை வரைறுக்கின்றன. எமது கலாசாரப் பாரம்பரியங்களை காலப்போக்கில் வகுக்கின்றன. சட்டங்களும் கொள்கைத் திட்டங்களும் மாற்றமடையாமல் நாம் எவ்வளவுதான் மக்களுக்குப் போதித்தும் ஒரு பயனுமில்லை. எவ்வளவுதான் கிராம மட்டங்களில் பெண்கள் குழுக்களுடன் வேலை செய்தும் ஒரு பிரயோசனமுமில்லை.

அதே போல், பெண்கள் வீட்டுக்குள்ளேயும் பகிரங்க இடங்களிலும் பரவலாகஅனுபவிக்கும் இம்சைகள் அவர்களை சுய கௌரவம் இழந்தவர்களாகவும் பயந்த சுபாவம் உள்ளவர்களாகவும் மாற்றி அவர்கள் ஆளுமையையே மழுங்கடித்து விடுகின்றது. ஆளுமை இழந்த பெண்ணொருத்தி இந்த உலகில் என்னதான் சாதிக்க முடியும்?

இணைந்த கரங்கள் பெண்கள் வலையமைப்பு, ஆளுமை மிகுந்தவர்களும், அதிகாரப் பதவிகளில் அமர்ந்தவர்களுமான பெண்களை உருவாக்கத் துடித்துக் கொண்டிருக்கின்றது. அதன்படி இதுவரை பெண்கள் அரசியலிலும், சமாதானம் உருவாக்கும் பொதுத் தளங்களிலும் எவ்வாறு பங்கு பற்ற முடியும் என்பதைப் பார்த்த நாம், இன்றைய தலைவி இதழில் பெண்கள் மீதான வன்முறையைப் பற்றிய ஒரு பார்வையை வாசகர்களுக்கும் வாசகிகளுக்கும் தருகின்றோம்.

துணிந்தெழுங்கள், வெற்றி கொள்ளுங்கள்!
பெண்களின் எழுச்சி! சமூகத்தின் உயர்ச்சி!

வாழ்த்துக்களுடன்,
ஆசிரியர்

## சுதந்திரத்துக்கு ஒரு பாடல்

பட்ரியா மினேர்வா, மரியா தெரஸா, டெடி ஆகிய சகோதரிகள் மேற்கிந்தியத் தீவுகளுக்கு அண்மையிலுள்ள டொமினிகன் குடியரசின் சிபாவோ பிரதேசத்தில் பிறந்தவர்கள். அவர்கள் காலத்தில் அந்நாட்டில் ட்ரூஜில்லோவின் சர்வாதிகார ஆட்சி நடந்து கொண்டிருந்தது. இந்த ஆட்சிக்கெதிரான துணிகரமான போராட்டத்திற்கு இவர்கள் தலைமை வகித்த காரணத்தினால் மக்களால் அன்புடன் "வண்ணாத்திப் பூச்சிகள்" என்று அழைக்கப்பட்டனர். இவர்களும் இவர்கள் கணவன்மார்களும் அடிக்கடி சிறைப்படுத்தப்பட்டார்கள், சித்திரவதை செய்யப்பட்டார்கள். 1960ம் ஆண்டு நொவம்பர் 25ம் திகதி இம்மூவரும் சிறையிலிருந்த தமது கணவன்மார்களைப் பார்க்கப் போயிருந்தபோது இரகசியப் பொலீஸ் இவர்களைக் கழுத்தை நெரித்து மலையுச்சியிலிருந்து தள்ளிக் கொலை செய்தனர். இந்தக் கொலை எழுப்பிய அதிர்ச்சி அலைகள் அங்கு நடைபெற்ற கொந்தளிப்பினையும் எதிர்ப்பியக்கங்களையும் தோற்றுவித்து ட்ரூஜில்லோவின் ஆட்சியையே கவிழ்த்தது. ட்ரூஜில்லோ 1961ம் ஆண்டு மே மாதம் கொலை செய்யப்பட்டான்.

மீராபல் சகோதரிகள் மக்கள் எழுச்சிக்கும் பெண்கள் எழுச்சிக்குமான சின்னங்களாக உலகெங்கும் கருதப்பட்டு வருகின்றனர். அவர்களின் ஞாபகார்த்தமாக ஏராளமான நூல்களும் கவிதைகளும் காவியங்களும் இயற்றப்பட்டிருக்கின்றன. அவர்கள் வாழ்ந்த வீடு ஒரு காட்சியகமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. டொமினிகன் குடியரசின் தலைநகரான சான்டோ டொமிங்கோவில் 1997ம் ஆண்டு மார்ச் மாதம் 8ந் திகதி இவர்களின் வாழ்க்கையை உருவகிக்கும் 137 அடி உயரமான ஓவியம் ஒன்று திறக்கப்பட்டது. இதன் தலைப்பு என்ன தெரியுமா? "சுதந்திரத்துக்கு ஒரு பாடல்"

சில தியாகங்களைச் செய்ய துணிச்சல் கொண்ட பெண்களினால்தான் உலக வரலாறு முன்னோக்கிச் சென்றிருக்கின்றது சகோதரிகளே. நாங்கள் பிறந்தோம் வாழ்ந்தோம் இறந்தோம் என்றிருப்பதில் என்ன பயன்? உயர்ந்த இலட்சியங்களை நாம் போற்றி அவை நிறைவேறப் பாடுபடுவதைவிட எமது வாழ்க்கையில் நிறைவைத் தரக்கூடியது வேறெது? நீங்கள் கூறுங்கள்.

*தலைவிக்கான ஆக்கங்களும் கடிதங்களும் ஒவ்வொரு மாதத்தின் 10ந்தேதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சிதறல்கள்

அச்சு மற்றும் மின் ஊடகங்களில் ஊடகவியலாளர்களாகப் பணிபுரியும் பெண்கள் சிலர் இணைந்து "ஊடறு" என்னும் ஊடகப் பெண்கள் அமைப்பினைத் தோற்றுவித்திருக்கின்றனர். இதன் இடைக்கால நிர்வாக சபையின் தலைவியாக பத்மா சோமகாந்தன் அவர்களும், செயலாளராக ஏ.தேவகௌரி அவர்களும் பொருளாளராக எஸ். விஜிதா அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஊடறு தனது முதல் நடவடிக்கையாக ஊடகங்களில் பணிபுரியும் பெண்களின் ஆளுமை வளர்ச்சிக்கான கருத்தரங்குகளை ஒழுங்கு செய்ய உத்தேசித்துள்ளது. இக்கருத்தரங்குத் தொடரின் முதல் கருத்தரங்கு ஒக்டோபர் மாதம் 12ந்தேதி கொழும்பில் நடைபெற்றது. இதன் ஆரம்ப வைபவத்தில் தினக்குரல் இயக்குனர் சபையின் அங்கத்தவர் திரு எஸ்பி சாமி அவர்களும், சூரியன் FM ஆலோசகர் திரு.நடராஜசிவம் அவர்களும், ரூபவாகினி கூட்டுத்தாபன தமிழ் பிரிவு பணிப்பாளர் திரு எஸ் விஸ்வநாதன் அவர்களும் பங்குபற்றி தங்களது கருத்துரைகளை வழங்கினர். ஆரம்ப வைபவத்தினைத் தொடர்ந்த அமர்வுகளில் பத்திரிகையாளர் மதுசூதனன், யா தொலைகாட்சியின் ஷாமினி யொய்ல், பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனப் பணிப்பாளர் செல்வி திருச்சந்திரன், தினகரன் இணை ஆசிரியர் பாலசிங்கம் ஆகியோர் வளப்பகிர்வாளர்களாகக் கலந்து கொண்டனர். வானொலி, தொலைக்காட்சி, மற்றும் பத்திரிகைகளில் பெண்கள் கருத்துக்கள் எதிரொலிக்கவும், கிராமந்தோறும் நகரந்தோறும் அவர்களுடைய நடவடிக்கைகள் ஊடகங் களில் வெளிச்சம் போட்டுக் காட்டப்படவும், பெண்களுக்கு சமத்துவம் வழங்கும் சமூக மாற்றத்திற்கான அடித்தளமாக நமது ஊடகங்கள் செயற்பட ஊடறு இயங்க நோக்கம் கொண்டுள்ளது. இந்த நடவடிக்கைகளுக்காக அவர்களுடன் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய

முகவரி: பத்மா சோமகாந்தன்
ஊடறு,
G 1/1 அன்டர்ஸன் தொடர்மாடி,
கொழும்பு - 5

கேர் நிறுவனம் பால்நிலை அடிப்படையிலான வன்முறையினை இல்லாதொழிக்கும் வேலைத்திட்டத்தினை இவ்வருடம் ஆரம்பித்திருக்கின்றது. தமது சகல திட்டங்களிலும் இப் பிரச்சனைக்கான நடவடிக்கை களும் தீர்வுகளும் உள்ளடங்கியிருக்க வேண்டும் என்பதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். பால்நிலை அடிப்படையிலான வன்முறை சமூகத்தின் பல மட்டங்களிலும் விரவியிருப்பதால் அது சமூக ஸ்தாபனங்களின் கூட்டமைப்பின்றியும் இணைந்த நடவடிக்கையின்றியும் தீர்க்கப்பட முடியாதென்று உணர்ந்து அது இத்திட்டத்திற்காக பலதரப்பட்ட நிறுவனங்களிலும் பணிபுரியும் பயிற்சியாளர்களையும் இத்திட்டத்தின் அனுபவசாலிகளையும் இணைத்து ஒரு ஆலோசனைக் குழுவினை உருவாக்கியிருக்கின்றது. இந்த ஆலோசனைக் குழுவின் பங்களிப்புடன் ஒக்டோபர் மாதம் 23 – 25 வரை பொலன்னறுவை மாவட்டத்திலும் நொவம்பர் மாதம் 10–13 வரை திருகோணமலையிலும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பான பயிற்சிகள் நடத்தப்படவிருக்கின்றன. பால்நிலை அடிப்படையிலான வன்முறையை குறித்து தங்கள் நடவடிக்கை களை முன்னெடுக்க விரும்புபவர்கள், அதற்கான பயிற்சிகள், ஆலோசனைகள் மற்றும் வேறு உதவிகள் தேவையெனின் தொடர்பு கொள்ள வேண்டிய

முகவரி :

பாமதி சோமசேகரம்
பால்நிலை உத்தியோகத்தர்
கேர் நிறுவனம்
7/5 கிரகரிஸ் வீதி
கொழும்பு - 7

- யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் அங்குள்ள சமூக அபிவிருத்தி மன்றத்தின் அங்கத்தவர்களுக்கு "முறைசாரா தொழில்களில் ஈடுபடும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள்" என்னும் தலைப்பில் கருத்தரங்கொன்றினை செப்டம்பர் மாதம் 28ந்திகதி நீர்வேலியில் நிகழ்த்தியது. இக்கருத்தரங்கில் பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தின் இயக்குனர் சரோஜா சிவச்சந்திரன் அவர்கள் முறைசாரா துறைகளில் பணிபுரியும் பெண்கள் தம்மை அமைப்பாக்கிக் கொள்ள வேண்டிய தேவைகளைப் பற்றி கருத்துரைகள் வழங்கினார்.
- சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு முன்னம்போடிவெட்டை துர்க்கா மாதர் சங்கம் இம் மாதம் 1 ஆம் திகதி சிறுவர் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தது.. சிறுவர்களின் ஆளுமை வளர்ச்சி, சுய அறிவு, சிந்திக்கும் திறன், ஆண் – பெண் பாகுபாடின்றி எதிர்காலச் சிறுவர்கள் வளர வேண்டும் என்கிற கருப்பொருள்களைக் கொண்டு இந் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.
- திருமலை அகம் நிறுவனத்தினரின் ஆலோசனையுடனும் Save The Children நிறுவன நிதியுதவியுடனும் திருமலை பெண்கள் அமையத்தால் திருகோணமலை வைத்தியசாலையில் சிறார்களுக்காக அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா திறப்பு விழா கடந்த செப்டெம்பர் மாதம் 23 ஆம் திகதி நடைபெற்றது.

# பெண்கள் மீதான வன்முறையைப் பற்றிய உலக வலம்

## ஆபிரிக்கா

- தென்னாபிரிக்காவில் ஆறு பெண்களில் குறைந்தது ஒருவர் தமது ஆண் துணையினால் கிரமமாக அடிக்கப்படுகின்றார். இச்சம்பவங்களில் 45வீதமான சம்பவங்களில் இந்த ஆண்கள் இப்பெண்களின் பிள்ளைகளையும் இம்சைப் படுத்துகின்றனர். கிழக்கு இலண்டன் என்று அழைக்கப்படும் ஒரு உள்ளூர்ப் பிரதேசத்திலேயே ஒரு வருடத்துக்கு சுமார் 100 பிள்ளைகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இவர்களில் 97வீதமானோர் பெண் பிள்ளைகளாகும்.
- தென்னாபிரிக்காவில் சராசரியாக ஒவ்வொரு நிமிடமும் ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகின்றாள். இவ்வாறு ஒரு வருடத்தில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படும் பெண்கள் கிட்டத்தட்ட 386,000 பேர்களாகும்.
- எத்தியோப்பியாவின் அகதிகள் முகாம் ஒன்றில் வாழ்ந்த பெண்கள் வெளியே விறகு எடுக்கப் போகும் நேரங்களில் நிகழ்ந்த பாலியல் வன்முறைகளின் அளவுகளினால் அவர்கள் பயந்து வெளியே போவதையே கூடியளவு தவிர்த்துக்கொண்டனர். இதனால் குறைய விறகுதான் அங்கு பொறுக்கப் பட்டதால் அம்முகாமில் செய்யப்பட்ட சமையல் குறைவடையத் தொடங்கியது. இதனால் அங்கு வாழ்ந்த பிள்ளைகள் குறைப் போசாக்குப் பிரச்சனை உடையவர்களாகக் காணப்பட்டனர்.
- வடக்கு நைஜீரியாவில் செய்யப்பட்ட ஆய்வொன்றின்படி பாலுறவு மூலம் கடத்தப்படுகின்ற தொற்றுக்களுக்காக சிகிச்சை தேடி வந்த பெண்களுள் 16 வீதமானோர் ஐந்து வயதிற்குட்பட்ட சிறுமிகளாகும்.
- 28 ஆபிரிக்க நாடுகளிலும், சில அரேபிய மற்றும் ஆசிய நாடுகளிலும் பெண்களின் பாலுறுப்புக்களைச் சிதைக்கும் வழக்கம் காணப்படுகின்றது. சுமார் 130 மில்லியன் பெண்கள் இச்சடங்கில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர். வருடாவருடம் 2 மில்லியன் பெண்கள் இச்சடங்கிற்கு உட்படுத்தப்படும் ஆபத்திலுள்ளனர்.

அடுத்த இதழ்களிலும் உலக வலம் தொடரும்.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் முதல் முஸ்லிம் பெண்மணிக்கு சமாதான நேபால் பரிசு

சுஷிரின் எபடி என்னும் 56 வயதுடைய ஈரானிய மனித உரிமை வழக்கறிஞருக்கு 2003ம் ஆண்டுக்குரிய சமாதான நோபல் பரிசு கிடைத்திருக்கின்றது. நோபல் பரிசின் 102 வருட வரலாற்றில் இப்பரிசினை எடுக்கும் முதல் ஈரானியர் இவர் என்பதுடன் நோபல் பரிசு பெறும் முதல் முஸ்லிம் பெண் இவர்தான் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இவர் நோபல் பரிசு பெறும் 11வது பெண்மணியாகும். ஈரானில் பெண்கள் சிறுவர்கள் தொடர்பான மனித உரிமைகள் போராட்டத்தில் பல வருட காலங்களாகத் தம்மை ஈடுபடுத்தி வருபவர் என்றும், பல சந்தர்ப்பங்களில் தனது உயிருக்கு ஆபத்து என்று தெரிந்திருந்தும் அதனை சட்டை செய்யாது தனது கடமையே கண்ணாக இருந்தவர் என்றும் இவரைப் பரிசுக்குத் தேர்ந்தெடுத்த நோபல் குழுவினர் தங்களது அறிக்கையில் தெரிவித்தனர்.

ஷிரின் எபடி 1974 ல் ஈரானின் முதல் பெண் நீதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். ஆனால் பின்பு 1979ம் ஆண்டு வந்த இஸ்லாமிய ஆட்சியின்போது பெண்கள் நீதிமன்றங்களுக்குத் தலைவியாக முடியாது என்று முடிவெடுக்கப்பட்ட தனால் தனது பதவியை இழந்தார். ஆனால் இதனால் அவர் பயந்து நாட்டை விட்டு வெளியேறவில்லை. "எனக்கு இஸ்லாத்துடன் ஒரு பிரச்சனையும் இல்லை. இந்த தந்தையுரிமைச் சமூகத்துடன்தான் பிரச்சனையிருக்கின்றது" என்று கூறி மனித உரிமைகளை நிலைநாட்ட நீண்ட போராட்டத்தினைத் தொடக்கினார். 1999ம் ஆண்டு அவர் ஐரோப்பியச் சஞ்சிகையொன்றிற்கு அளித்த பேட்டியில், "ஈரானில் மனித உரிமைகளுக்காக பணி செய்வது பயம் தான். ஆனால் நான் எனது அனுபவங்களுக்கூடாக என் மனத்திலுள்ள பயத்தை வெல்லப் பழகி விட்டேன். அதுவே ஒரு பெரிய சாதனை" என்று கூறியுள்ளார்.

இவர் அங்கு எதிர்வு கூறியபடியே 2001ம் ஆண்டு பேர்லின் நகரில் ஈரானின் அரசினை சீர்திருத்தும் விடயத்தினை ஒட்டிய கருத்தரங்கில் இவர் கலந்து கொண்டதனால் சிறையிலிடப்பட்டும் விட்டார். ஆனால் அவர் இதுவரை பின்வாங்கவில்லை.

ஷிரின் பெண்ணியத்தை ஆதரித்தும் ஏராளமான நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். முஸ்லிம் குடும்பச் சட்டங்கள் மாற்றப்பட வேண்டும் எனவும், பெண்களை ஒடுக்கும் ஏனைய சட்டங்கள் மாற்றப்பட வேண்டும் எனவும் இடைவிடாது எழுதி பேசி வந்துள்ளார். ஈரானிய ஜனாதிபதி அங்குள்ள பெண்களின் ஆதரவுடன் ஒரு ஜனநாயக சீர்திருத்த இயக்கத்தினை முன்னெடுத்துச் செல்கின்றபோதும் அங்கு இன்னமும் இஸ்லாமிய அடிப்படை மதவாதிகளின் தாக்கம் நின்று போகவில்லை. ஈரானிய புத்திஜீவிகள் இவர்களினால் கொலை செய்யப்படுவது தொடர்ந்தும் கூட ஷிரின் போன்ற வழக்கறிஞர்கள் தங்கள் போராட்டத்தைக் கைவிடவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

ஷிரின் நோபல் பரிசை ஏற்றுக் கொண்டவுடன் பாரிஸ் நகரத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் மிகவும் காரசாரமாகவும் சுவாரசியமாகவும் உரையாடினார்.

"மனித உரிமைகளை மதியுங்கள் என்ற கோரிக்கையை ஈரானிய அரசாங்கத்திற்கு இங்கு முன்வைக்கின்றோன். அங்கு தங்கள் அரசியல் கருத்துக்களுக்காக சிறையில் வாடும் ஆயிரக்கணக்கான அரசியல் கைத்திகளை உடனடியாக விடுவித்து பேச்சு சுதந்திரத்தை மதிக்க வேண்டும். இஸ்லாம் மனித உரிமைகளுக்கு எதிரானதல்ல. நீங்கள் குர் ஆனை படித்துப் பார்த்தால் அங்கு மனித உரிமைகளுக்கு எதிராக ஒன்றுமே எழுதப்படவில்லை என்பது புரியும். 20 வருடங்களாக நான் மனித உரிமைகளை மதிக்கும் அரசை முஸ்லிம்களுக்கும் ஸ்தாபிக்க முடியும் என்ற செய்தியையே பரப்பியிருக்கின்றேன். ஆனால் அதே சமயம் முஸ்லிம்களின் தேசங்களில் அமெரிக்கத் தலையீட்டைக் கண்டிக்கின்றேன். ஈரானில் மனித உரிமைகளுக்கான போராட்டம் ஈரானியரினாலேயே முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது, அவ்வாறுதான் முன்னெடுக்கப்பட வேண்டும். நாங்கள் ஒருபோதும் அந்நியத் தலையீட்டை இங்கு அனுமதிக்க மாட்டோம்.

ஈரானில் நிலவும் சட்டங்களின் காரணமாக அங்கு ஒரு பெண்ணாக வாழ்வது அவ்வளவு இலகுவானதல்ல. ஆனால் இவ்வளவு கஷ்டங்களுக்கும் மத்தியிலும் எனது போராட்டங்களை ஒரு பெண்ணாகவும் ஒரு நீதிமானாகவும் தொடர்வதே எனது வாழ்க்கையின் அழகு என்று நினைக்கின்றேன். நான் வேறு ஒரு நாட்டைச் சேர்ந்தவளாக இருந்திருந்தால் இன்று இவ்வளவு பெருமையடைந்திருக்க மாட்டேன்.

இந்தப் பரிசு என்னை இன்னும் புதிய தெம்புடன் எனது போராட்டத்தை முன்னெடுக்க உதவியுள்ளது. இது எனக்கு மட்டும் வழங்கப்பட்ட பரிசு அல்ல. உலகெங்கும் மனித உரிமைகளுக்காகப் போராடும் சகல செயலாளிகளுக்குமாக வழங்கப்பட்ட பரிசு!"



ஷிரீன் எபடி!

# இலக்கியத்தில் பெண்கள் மீதான வன்முறை

## கதைத் தொடர்......

எமது பாரம்பரிய இலக்கியங்களிலும் சமய இலக்கியங்களிலும் ஏராளமான சம்பவங்கள் பெண்கள் மீது எத்தகைய வன்முறைகள் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கோடு காட்டுகின்றன. நாங்கள் எல்லோரும் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எங்கள் சிறு வயது முதல் வாசித்து அதனைப் பற்றி சர்வ சாதாரணமாக அளவளாவி வருவதனால்தான் அக்குற்றத்தினை ஒரு பாரதூரமான பிரச்சனையாக எடுக்காமல் அதனை அங்கீகரிப்பவர்களாக வளர்கின்றோம். பெரும்பாலான கதைகளில் அந்த நடவடிக்கைகள் கண்டிக்கப் படுவதே கிடையாது. மேலும், அவை அநேகமாக கதையின் கதாநாயகனினாலோ அல்லது ஆண்டவனால் அருள் செய்யப்பட்ட ஒருவரினாலோ மேற்கொள்ளப் படுவதால் செய்யப்படுவது தவறாகாது என்ற ரீதியில் தரப்படுகின்றன. பெண்கள் மீதான வன்முறையை சமூகமயப்படுத்த உதவும் இவ்வகையான கதைகளை இங்கு தலைவி வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. இன்று மகாபாரதத்தில் வரும் அம்பையின் கதை தரப்படுகின்றது. இதே போன்று இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் ஆகிய சமய இலக்கியங்களில் பெண்கள் மீதான வன்முறையை சித்தரிக்கும் பாரம்பரியக் கதைகளை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள் சகோதரிகளே. இக்கதைகளை மீளப் பரிசீலிப்பதே எங்கள் அறிவுக் கண்களைத் திறக்கும் பெறுமதி மிக்க நடவடிக்கையாகும்.

**அம்பையின் கதை**

குல மானத்தைக் காப்பதற்காகவும், தங்கள் சுயகௌரவத்தைக் காப்பாற்றுவதற்காகவும் பெண்களைத் தங்கள் இஷ்டப்படி ஆண்கள் பந்தாடியதற்கு அம்பையின் கதை ஒரு சிறந்த உதாரணமாகும். இதில் ஒரு பெண்ணின் விருப்பு வெறுப்புக்கள் எவ்வளவு துச்சமாக மதிக்கப்பட்டன என்பதைப் பார்க்கலாம். பெண்களும் தங்கள் நிலைமையை வெகு ஆக்ரோஷமாக எதிர்த்திருக்கிறார்கள். இவர்கள்தான் அன்றைய பெண்ணிலைவாதிகள் என்று கூறினாலும் மிகையாகாது. இனிக் கதையை நோக்குங்கள்.

"ஹஸ்தினாபுரத்தை ஆண்ட சந்தனு மகாராஜாவின் மைந்தர் பீஷ்மர். வேதங்களிலும் போர்க்கலைகளிலும் விற்பன்னர். பட்டத்து இளவரசனாக நாட்டின் கண்மணியாகத் திகழ்ந்தவர். இப்படியிருக்கையில் சந்தனு சத்தியவதி என்னும் பெண்ணை மணம் புரிய ஆசை கொண்டான். ஆனால் அவளோ அந்தத் திருமணத்திற்கு விலையாக தனக்குப் பிறக்கும் மைந்தனே நாட்டையாளவேண்டும் என்ற நிபந்தனையை விதித்தாள். தன் தந்தையின் சந்தோஷத்துக்குக் குறுக்கே நிற்க விரும்பாத பீஷ்மர் ஆட்சியைத் துறக்கும் சபதம் எடுத்தார்.இது மட்டுமன்றி, எந்நேரமும் தான் ஆட்சியிலுள்ள தனது சிற்றன்னையின் மைந்தர்களைக் காப்பேன் என்று சூளுரைத்து, தான் ஆட்சிக்கான வாரிசினைத் தோற்றுவித்தால் அது வேறு குழப்பங்களை உண்டு பண்ணும் என்பதால் பிரம்மச்சரிய விரதமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூண்டார் தியாகி பீஷ்மர். தந்தைக்காக தனயன் மேற்கொண்ட இத்தியாகத்தினாலே வானில் உள்ள தேவர்கள் பூச்சொரிந்தனர்.

சத்தியவதிக்கு சித்திராங்கதன், விசித்திரவீரியன் என்று இரு மைந்தர்கள் பிறந்தார்கள். அவர்கள் வாலிபப் பருவத்தை அடைந்தார்கள். அப்போது காசிராஜன் தனது புதல்விகள் அம்பை, அம்பிகை, அம்பாலிகை ஆகியோருக்கு சுயம்வரம் வைத்தான். பாரம்பரியமாக காசிராஜன் குலமும் சந்தனுவின் குலமும் திருமண உறவுகள் வைத்திருந்தும் இந்த சுயம்வரத்துக்கு "ஹஸ்தினாபுரத்துக்கு அழைப்பு வரவில்லை. இதைக் கண்டு வெகுண்டெழுந்த பீஷ்மர், சுயம்வரத்துக்குச் சென்று சகலரும் பார்த்து நிற்க மூன்று பெண்களையும் கவர்ந்து தனது நாட்டிற்குக் கொண்டு வந்தார். தனது சகோதரர்களுக்கு அவர்களை மணம் முடித்தும் வைக்கத் தலைப்பட்டார்.

அப்போது, அம்பை எனப்படுபவள், தனக்கு ஒரு காதலன் இருப்பதாகவும் அவனையே தான் மணம் முடிக்க விரும்புவதாகவும் கண்ணீர் மல்கக் கூறினாள். இதனால் அவளை அவள் காதலனிடம் அனுப்பி வைத்தார் பீஷ்மர். ஆனால் காதலனோ வேற்று ஆடவன் கைப்பிடித்து கொண்டு சென்ற பெண் தனக்கு வேண்டாம் என வெறுப்புடன் திருப்பியனுப்பி வைத்தான். திரும்பி வந்த அம்பைக்கு வேறு வழியில்லை. கோபத்துடன் இருந்த தந்தையும் தன் வீரத்துக்குக் களங்கம் இழைக்கப்பட்டதற்குச் சின்னமாக இருந்த அம்பையை ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. அவள் பீஷ்மரிடம் ஓடினாள். அவரையே தன்னை மணம் செய்யச் சொல்லிக் கோரினாள். அவரோ தனது பிரம்மச்சரிய விரதத்தைக் காட்டி அவளை மணக்க மறுத்து விட்டார்.

கோபம் கொண்டாள் அம்பை. தனது நிர்க்கதியான நிலைக்கு தனது விருப்பத்திற்கு மாறாகத் தன்னைக் கவர்ந்து வந்த பீஷ்மரே காரணம் என்று குற்றஞ் சாட்டினாள். இதன் விளைவாக அவள் ஒரு சபதம் எடுத்தாள். யாருமே வெல்ல முடியாத பராக்கிரமசாலியான பீஷ்மரைத் தான் இன்னொரு பிறவி எடுத்து வந்து நிலத்தில் சாய்ப்பதாகச் சூளுரைத்த வண்ணம் தன் உயிரை மாய்த்துக் கொண்டாள். அவள் கூறியபடியே அடுத்த பிறவியில் சிகண்டி என்னும் அலியாக அவதாரம் எடுத்து மகாபாரத யுத்தத்தில் பீஷ்மரைக் கொன்று தன் வஞ்சம் தீர்த்தாள்

- - - - - - -

# பெண்கள் மீதான வன்முறையை ஒழிக்க இணைந்த கரங்கள்

## சகோதரிகள் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள்

வருகின்ற நொவம்பர் மாதம் 25ம் திகதி முதல் டிசம்பர் 10ந்திகதி வரை நிகழவிருக்கின்ற 16 நாள் பிரச்சார நடவடிக்கையின்போது சமூக விழிப்புணர்வினை ஏற்படுத்தவும் , வன்முறையில் பாதிக்கப்பட்ட பெண்களு க்கு உதவவும் நீங்கள் பலதரப்பட்ட நடவடிக்கைகளை எடுக்கலாம் சகோதரிகளே. உதாரணத்துக்கு சில நடவடிக்கைகளை கீழே தருகின்றோம்.

1. உள்ளூர் மற்றும் தேசிய மட்டத்தில் அரச உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு ஐ.நா ஸ்தாபனம் 1999ல் செய்தது போல் எங்கள் நாடும் நொவம்பர் 25ஐ பெண்கள் மீதான வன்முறைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நாளாக பிரகடனம் செய்யக் கோருங்கள். இதற்கான வழிமுறைகள்,

- அரசியல் தலைவர்களுக்கும் அமைச்சுக்களுக்குமான மகஜர்
- சங்கிலித் தொடர் கடிதங்கள். இதன்படி உதாரணமாக முதலாமவர் பெண்கள் விவகார அமைச்சுக்கு இக்கோரிக்கையையொட்டி தான் எழுதும் கடிதத்தின் பிரதியை மேலும் பத்து பேருக்கு அனுப்புதல். அவர்கள் ஒவ்வொருவரும் தாமும் அதில் கையொப்பமிட்டு அதன் ஒரு பிரதியை அமைச்சுக்கும் இன்னும் பத்து பிரதிகளைத் தமக்குத் தெரிந்த பத்து பேர்களுக்கும் அனுப்புதல். இவ்வகையில் ஆயிரக்கணக்கான கடிதங்கள் நாம் அனுப்ப வேண்டிய இடங்களில் குவியும். அதுவே ஒரு அழுத்த சக்தியாகும்.
- தொடர்பு சாதனங்கள் மூலமாக பொது மக்களுக்கு இத்தேவையை அறிவிப்பதன் மூலம் அதிகாரிகளின் கவனத்தைக் கவருதல்.
- உங்கள் உங்கள் பாராளுமன்ற அங்கத்தவர்களின் மூலம் பாராளுமன்றத்தில் இந்த விடயத்தை எழுப்பித் தீர்வு காணல்.

2. 16 நாட்களும் வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி போன்ற தொடர்பு ஊடகங்களில் தினந்தினம் இப்பிரச்சனையைப் பற்றிய நிகழ்ச்சிகள் ஒலி ஒளி பரப்பாவதற்கு ஏற்பாடுகள் செய்தல். உதாரணமாக உங்கள் குழுக்களின் அங்கத்தவர்களின் மூலம் வன்முறையினால் பாதிக்கப்பட்ட சாதாரண பெண்களின் கதைகளையே தினம் ஒரு கட்டுரையாக வெளியிடலாம். அல்லது, வானொலியின் தொலைபேசி நிகழ்ச்சிகளின்போது வானொலி நிலையத்தினை அழைத்து இவ்விடயத்தினைப் பற்றிப் பேசலாம். உங்கள் பிரதேசங்களில் எத்தனை வன்முறைச் சம்பவங்கள் நிகழுகின்றன என்ற புள்ளிவிபரத்தினை ஏற்கனவே சேகரித்து வைத்தல் ஊடக வேலைகளுக்கு உதவும்.

   முக்கியமாக, ஊடகவியலாளர் மத்தியில் அரசியல் தலைவர்களால் முன்னெடுக்கப்படும் ஏதும் அரசியல் நடவடிக்கை மட்டுமே காத்திர மானது, செய்திகளில் தெரிவிக்கப்படும் அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்கின்ற அபிப்பிராயம் பரவலாகக் காணப்படுகின்றது. மகாத்மாவின் கூற்றுக்களை உதாரணமாகக் காட்டி, பெண்கள் மீதான வன்முறையும் ஒரு முக்கியமான அரசியல் பிரச்சனைதான் என்பதை அவர்களுக்கு வலியுறுத்துவதே பெரிய சாதனையாகும்.

   இவ்வகையான ஊடக வேலைகளுக்கு கொழும்பைச் சார்ந்த "ஊடறு" ஊடகப் பெண்கள் அமைப்பு உங்களுக்குத் தேவையான சகல உதவி களையும் வழங்கும்.

3. சமூக மட்டத்தில் பெண்கள் மீதான வன்முறையை எதிர்த்து சேவைகள் புரிந்தவர்களுக்கு பெரியதொரு பாராட்டு விழா நடத்தலாம்.

4. இனிவருங்காலம் நத்தார் மற்றும் புது வருட பண்டிகைக் காலங்கள் ஆகையால் பெண்கள் மீதான வன்முறையை ஒழிக்கும் தேவையை வலியுறுத்தும் வாழ்த்து மடல்களை அச்சிட்டு அவற்றை விற்கலாம். இதில் பெறப்பட்ட வருமானம் தொடர்ந்த நடவடிக்கைகளுக்கு உதவியாக இருக்கும். வாழ்த்து மடல்கள் எட்டுத் திக்கும் போய் மக்கள் கைகளில் தவழும்போது அவர்களும் இப்பிரச்சனையைப் பற்றிச் சிந்திப்பதற்கு வாய்ப்பாக இருக்கும்.

5. உங்கள் கிராமத்திலேயோ அல்லது பிரதேசத்திலேயோ ஏதாவதொரு வட்டாரத்தை வன்முறையற்ற வட்டாரமாகப் பிரகடனப்படுத்தலாம். இதன்படி, அந்த வட்டாரத்துக்குள் எந்தப் பெண்ணும் இம்சிக்கப்பட லாகாது என்ற சட்டத்தை நிலை நாட்டலாம்.

6. தரமான கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றலாம். இதில் கவிதா நிகழ்வு, நாடகம், இசை நிகழ்ச்சி, விவாத அரங்கு போன்றன இருந்தால் சுவாரசியமாக இருக்கும். ஒவ்வொரு நிகழ்ச்சியும் பால்நிலை பற்றியும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையைப் பற்றியும் இருக்க வேண்டும். பழைய புராண நாடகங்களை புதிய கண்ணோட்டத்தினூடு தயாரித்து மேடையேற்றலாம். இதன்மூலம், நாம் இதுவரை காலமும் கேள்வி கேட்காதிருந்த, அல்லது சரியென்று நினைத்திருந்த நடவடிக்கைகளை மீளப் பரிசீலனை செய்ய உதவலாம். பார்வையாளரையும் பங்கேற்க வைக்கும் பங்கேற்பு அரங்கு இதற்கு மிகப் பயன்படும்.

7. உங்கள் வட்டாரத்துப் பாடசாலைகள் தமது ஆசிரியர்கள் மாணவர்களுடன் இவ்விடயத்தைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கான ஒரு நாளை ஒதுக்கச் செய்யலாம். ஆயினும் இதற்கு முன்னால், அந்த ஆசிரியர்களுக்கு ஒரு சிறு கருத்தரங்கு ஏற்பாடு செய்து அவர்களையும் இதற்கு தயார் செய்வது நன்று. பாடசாலைகளில் சிறிய கண்காட்சிகளையும் ஏற்பாடு செய்யலாம். இதில் வன்முறைக்குள்ளான பெண்களைப் பற்றியும், உயர்ந்த இலட்சியங்களுக்காக தங்கள் வாழ்க்கையைத் தியாகம் பண்ணி வன் முறையினால் இறந்த பெண்களைப் பற்றிய விவரங்களையும் வெளிக்கொணரலாம்.

8. 16 நாட்களும் வீதியோரங்களிலும் தெருச்சந்திகளிலும் பெண்கள் மீதான வன்முறையை ஒழிக்கும் அடையாளச் சின்னங்களை நிறுத்தலாம். இவை காட்சிகளாகவோ அல்லது சின்னங்களாகவோ இருக்கலாம். முக்கியமாக பார்ப்பவருக்கு விடயத்தை இலகுவில் விளங்கப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

9. உங்கள் வட்டாரத்துக்கு அருகே பல்கலைக்கழகங்கள் இருக்கு மாயின், அவற்றைக் கொண்டு பெண்கள் மீதான வன்முறையைப் பற்றிய ஆய்வரங்குகள் நடத்தலாம்.

10. கோயில்களில் இதற்கான விசேட பூஜைகள் ஏற்பாடு செய்யலாம். நவீன கதாகாலட்சேபங்கள், ஏன் பஜனைகள் கூட நிகழ்த்தலாம்.

இப்படி உங்கள் கற்பனைக்குத் தோன்றும் இன்னும் ஏராளமான நடவடிக்கைகளில் இறங்கலாம் சகோதரிகளே. மேலே குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளை செயற்படுத்த பெரும் நிதி வளங்களோ வேறு வசதிகளோ தேவையில்லையென்பது அவற்றைப் பார்த்தவுடன் உங்களுக்குப் புரியும். உங்களுக்கு அர்ப்பணிப்பும் ஆர்வமும் இருந்தாலே போதும். ஜமாய்த்து விடுவீர்கள். எங்கே பார்ப்போம். உங்கள் சாதனைகளை......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் மீதான வன்முறை :

## இப்பிரச்சனையின் பரிமாணங்கள்

மகாத்மா காந்தி அவர்கள், இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தின்போது, எதிர்கால இந்தியாவினைப் பற்றிய தனது கனவினை பாரததேசத்தின் முன் வைத்த காலம் அது. அவர் அடிக்கடி இராமர் ஆண்ட இராச்சியத்தினைப் போன்று நீதி வழுவாத அரசு இந்தியாவுக்கு வேண்டும் என்று கூறி வந்தார். இராமர் ஆண்ட இராச்சியம் போலவெனில் அது எப்படி இருக்கும் என்று ஒருமுறை அவரிடம் வினவியபோது அதை எப்படி விளக்கினார் தெரியுமா? "ஒரு பெண் தட்டத் தனியே நடுநிசியில் அலங்கார ஆபரண பூஷிதையாக வீதியில் ஒருவித அச்சமும் ஊறும் இல்லாமல் சென்று வரக்கூடிய நாடு" என்று கூறினார். பார்த்தீர்களா சகோதரிகளே. எதிர்கால இந்தியாவை உருவகிக்கும்போது அவர் சட்டங்களைப் பற்றிக் கதைக்கவில்லை, காவல் துறையைப் பற்றிக் கதைக்கவில்லை, பொருளாதாரத் திட்டங்களைப் பற்றிக் கதைக்கவில்லை. அரசியல் கட்சிகளைப் பற்றிக் கதைக்கவில்லை. ஜனநாயகத்தைப் பற்றிக் கதைக்கவில்லை. அவர் பெண்களைப் பற்றியே பேசினார். அவர்களின் பாதுகாப்பு நிச்சயப்படுத்தப் படுவதைப் பற்றியே குறித்தார்.

மகாத்மாவின் பார்வையில், எங்கு ஒரு பெண்ணுக்கு எந்தவித அச்சுறுத்தலும் இல்லையோ, அங்கு ஒரு ஜனநாயக சமூகத்துக்கு அவசியமான சகல சட்டங்களும், நீதிப் பொறிமுறைகளும், பொருளாதார நீதியும் நிறுவப்பட்டு செயற்படுத்தப்படுகின்றன என்பதே அர்த்தமாகும். சுருங்கக்கூறில், எந்த அளவுக்கு ஒரு சமூகத்தில் நீதியும் சமத்துவமும் உண்மையாக இருக்கின்றது என்று அளப்பதற்கு அங்கு எந்த அளவுக்கு ஒரு பெண்ணை அது சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும், பாதுகாப்புடனும் உலவ விடுகின்றது என்பதே போதுமான ஒரே சுட்டியாகும். இதனால்தான், பெண்கள் மீதான வன்முறை என்பது எமக்கு உலக அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகின்றது. இது இன்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் வரை விவாதிக்கப்படும் பொருளாக இருக்கின்றது.



ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பெண்கள் மீதான வன்முறைக்கு பின்வருமாறு வரைவிலக்கணம் கொடுக்கின்றது: "உடல் ரீதியாகவும், பாலியல் ரீதியாகவும், உள ரீதியாகவும் பெண்களுக்கு ஊறு அல்லது துன்பம் விளைவிப்பதாயோ அல்லது விளைவிக்கக்கூடியதாயோ உள்ள பால்நிலை அடிப் படையிலான வன்முறை பெண்கள் மீதான வன்முறையாகும். இது, அவர்கள் சொந்த வாழ்விலோ அல்லது பொது வாழ்விலோ, இப்படியான வன்முறைக்கான பயமுறுத்தல்கள், மற்றும் வற்புறுத்தல்கள், எழுந்தமானமாக சுதந்திரத்தினைக் கட்டுப்படுத்தும் செயல்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கும்."

இங்கு பால்நிலை என்பது ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமூகம் கற்பிக்கும் பாத்திரங்களையும் பொறுப்புக்களையும் குறிக்கும். இவ்வாறு சமூகம் கற்பிக்கும் பாத்திரங்களினால்தான் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் அசமத்துவமான அதிகார உறவுமுறைகள் பேணப்படுகின்றன. இதனூடாக பெண்கள் பலவீனமானவர்களாக ஆக்கப்படுகின்றார்கள். இந்த அதிகார உறவு முறைகளைத் தக்கவைத்துக் கொள்ள உபயோகிக்கப்படும் முக்கிய கருவிகளில் ஒன்று வன்முறையாகும். ஆகவே பால்நிலை அடிப்படையிலான வன்முறை என்பது பெண்கள் தாம் பெண்கள் என்ற காரணத்தினால் தமது நிலையில் நின்று எதிர்கொள்ளும் வன்முறையைக் குறிக்கின்றது.

மனைவியை அடித்தல், அமிலம் எறிதல், தீ மூட்டுதல், சிறுமிகளின் பாலு றுப்புக்களைச் சிதைக்கும் வழக்கங்கள், பெண் சிசுக்களைக் கருவில் அழிக்கும் வழக்கம், கட்டாயக் கருக்கலைப்பு, மனத் தைக் காயப்படுத்தும் வார்த்தைகளினால் தூற்றுதல், குடும்ப அங்கத்தவர்களால் மேற்கொள்ளப்படும் தகாத உறவு உட்பட்ட சகலவித பாலியல் துஷ்பிரயோகங்கள், பாலியல் வன்முறைகள் ஆகியவை பெண்கள் மீதான வன்முறையாகும். இவை தவிர பால்வினைத் தொழில்களுக்காகவும், வற்புறுத்தல் கல்யாணங்களுக்காகவும் பெண்களையும் சிறுமிகளையும் கடத்துத லும் இதற்குள் அடங்கும். ஐநாவின் பெண்களுக்கெதிராகக் காட்டப்படும் சகலவிதமான பாகுபாடுகளையும் ஒழிக்கும் பட்டயம் தனது உறுப்புரைகள் பலவற்றில் பெண்கள் மீதான வன்முறையை ஒழிக்கும் தீர்மானங்களை முன்வைத்துள்ளது.



எமக்கு வரலாறு தெரிந்த காலந் தொட்டு இன்றுவரை பெண்கள் ஆண்கள் கையால் இழிவுபடுத்தப்பட்டும் துன்புறுத்தப் பட்டும் இருக்கின்றார்கள். இந்து சமயத்தின் இதிகாசங்களையும் புராணங்களையும் எடுங்கள். ஒவ்வொரு கதையிலும் பெண்கள் துன்புறுத்தப்படுவதுதான் சர்வ சாதாரணமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. மகாபாரதத்தின் காவிய புருஷர், தமது தந்தையின் சந்தோஷத்துக்காக தமது முடியையே தியாகம் செய்த நீதியும் தர்மமும் வழுவா பீஷ்மர் தானே பெண்களை அபகரித்துச் செல்லும் குற்றத்தினைப் புரிந்திருக்கின்றார். (இந்தக் கதை சுருக்கமாக இவ்விதழில் தரப்பட்டிருக்கின்றது.) அது மட்டுமா, திரௌபதை, சீதை என நாம் இன்னுமின்னும் கதைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். போரின்போது வெற்றியீட்டிய படைகள் தாம் வெற்றி கொண்ட நாட்டின் பெண்களை சுகிப்பது சமூகம் ஏற்றுக்கொண்ட தர்மமாக இருந்தது, இப்பொழுதும் இருக்கின்றது. அந்நியப் படைகள் உள்ளே நுழைந்து விட்டன என்று அறிந்ததும் தம் மானங்காக்க தீக்குளித்த இராஜஸ்தானிய இளவரசிகள் எங்கள் இலக்கியங்களில் காவியங்களாக வர்ணிக்கப்படுவதில்லையா? ஏன், இந்தியா பாகிஸ்தான் பிரிவின்போது நிகழ்ந்த வன்முறைகளினால், வேற்று இன ஆண்களிடம் இருந்து தமது மானங் காக்க ஆயிரமாயிரம் பெண்கள் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டனரே. அவர்களை நாங்கள் நினைவு கூருவதுகூட இல்லையல்லவா?



தாம் வன்முறையினால் பாதிக்கப்படக்கூடியவர்கள் என்ற அச்சமே இன்று எங்கள் சமூகத்தில் பெண்கள் தங்கள் நடமாட்டத்தினைப் பெருமளவு குறைப்பதற்கு இட்டுச் சென்றிருக்கின்றது. வெளி நடமாட்டம் குறுகிய பெண்கள் ஈற்றில் வெளியுலகம் தெரியாதவர்களாகவும், சமூகத்தின் பொதுத் தளங்களில் பங்கு பற்றாதவர்களாகவும் முடிகின்றனர். இதன் காரணத்தினால்தான் அரசியல் போன்ற பொது வாழ்விற்குள் பெண்கள் நுழைவது மிகக் குறைவாக இருக்கின்றது. அது மட்டுமன்றி, வன்முறை குறித்த அச்சத்துடன் சதா சர்வகாலமும் வாழ்கின்ற பெண்கள் தங்கள் செயலாண்மையை இழக்கின்றனர், அவர்கள் கொண்டுள்ள வினைத்திறன்கள் குறைகின்றன. ஐரோப்பாவில் செய்யப்பட்ட ஒரு ஆய்வில் பெண்கள் மீதான வன்முறையை ஒழிப்பதனால் நாட்டின் உற்பத்தித்திறனையும் கூட்டலாம் என்று காணப்பட்டுள்ளது. இதிலிருந்து, பெண்களின் தாழ்வு நிலையின் காரணமாகவே அவர்கள் மீது பிரயோகிக்கப்படும் வன்முறை, அவர்கள் சமூக, அரசியல், பொருளாதார வாழ்வை மேலும் மழுங்கடிப்பதை நாம் காணலாம்.

எங்கெங்கோ அரசியலமைப்புச் சட்டங்களிலும் நீதித்துறைகளிலும் சுதந்திரத்தினையும் சமத்துவத்தினையும் நிலைநாட்டத் துடித்த இந்த உலகமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களின் நிலையைக் கண்டும் காணாமலே இருந்துவிட்டது. இவற்றை யெல்லாம் சர்வதேச பெண்கள் இயக்கங்கள் கண்டித்துக் குரல் எழுப்பியதன் பயனாகவே இன்று ஐ.நாவினால் பெண்கள் மீதான வன்முறை ஒரு பாரிய குற்றமாகக் கருதப்படுகின்றது. இவற்றைத் தடுப்பதற்குரிய கருத்திட்டங்களை இயற்றி உலகெங்கும் அது செயற்படுத்தி வருகின்றது. யுத்தகாலத்தில் பெண்கள் மீது இழைக்கப்படும் பாலியல் வன்முறைகள், சித்திரவதை, படுகொலைகள் போன்றவற்றிற்கு ஈடான குற்றங்களாக இப்பொழுது சர்வதேச நீதிமன்றத்தினால் கருதப்படுகின்றது.

1999ல் ஐ.நா ஸ்தாபனம் நொவம்பர் 25ம் தேதியை பெண்கள் மீதான வன்முறையை ஒழிப்பதனை நினைவுகூரும் சர்வதேச தினமாகப் பிரகடனம் செய்தது. இந்தத் தினம், 1960ம் ஆண்டு டொமினிகன் குடியரசில் ர.ஃபாயல் ட்ரூஜில்லோ என்கின்றவனுடைய சர்வாதிகார ஆட்சியை எதிர்த்துப் போராடிய மீராபல் சகோதரிகள் வதையுற்று கொலை செய்யப்பட்ட தினமாகும். 1990களிலிருந்து ஒவ்வொரு வருடமும் சர்வதேச பெண்கள் அமைப்புக்கள் நொவம்பர் 25 தொடக்கம் மனித உரிமை தினமாகிய டிசம்பர் 10ந்திகதி வரையுள்ள 16 நாட்களை பெண்கள் மீதான வன்முறையினை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மீட்டிப் பார்க்கும், செயற்படுத்தும், விழிப்புணர்வூட்டும் நாட்களாக அனுசரித்து வந்திருக்கின்றன. இந்த வருடம், இப்பிரச்சாரம், நொவம்பர் 25ம் திகதியை சகல நாடுகளும் உத்தியோக பூர்வமாக பெண்கள் மீதான வன்முறையை ஒழிப்பதற்கான நாளாகப் பிரகடனம் செய்ய வேண்டும் என்கின்ற கோரிக்கையுடன் மேற்கொள்ளப் படுகின்றது. இணைந்த கரங்கள் சகோதரிகளும் இப்பிரச்சார நடவடிக்கையில் உலக சகோதரிகளுடன் கைகோர்த்து இணைய வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றோம்.

## உங்களுக்குத் தெரியுமா?

ஒரு சர்வதேச பெண்கள் நிறுவனம் 1993 – 1997 வரையுள்ள காலப்பகுதியில் 140 நாடுகளில் பெண்கள் தங்கள் காதலர்களினால் அல்லது கணவன்மார்களினால் வன்முறையின் மூலம் இம்சைப் படுத்தப்படும் சம்பவங்களைத் தொகுக்கும் ஒரு ஆய்வினை நடத்தியது. "பெண்களின் நிலைப்பாடு என்ன" (where women Stand) என்று தலைப்பிடப்பட்ட இந்த ஆய்வில் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு அந்தஸ்து பெண்களுக்கு வழங்கப்படு வதாகக் காணப்பட்டது.


இதன் காரணமாக சில நாடுகளில் பேட்டி காணப்பட்ட பெண்களில் 20 வீதத்தினரும் சில நாடுகளில் 60 வீதத்தினரும் தங்கள் துணைவர்களினால் இம்சிக்கப்பட்டதாகத் தெரிவித்தனர். ஆய்வுக்குட் படுத்தப்பட்ட நாடுகளில் இலங்கையும் ஒன்று. இலங்கையில் பெண்கள் துன்புறுத்தப்படுகின்ற வீதம் எவ்வளவு என்று அறிய ஆவலாக இருக்கின்றதா? கீழே பாருங் கள். எங்கள் நாட்டையும் வேறு சில நாடுகளையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

| | | | |
|---|---|---|---|
| நெதர்லாந்து | 21 | ஜப்பான் | 59 |
| நோர்வே | 25 | சிலி | 60 |
| கனடா | 27 – 36 | இலங்கை | 60 |
| மலேசியா | 39 | ஈகுவடோர் | 60 |
| ஸாம்பியா | 40 | | |
| உகண்டா | 46 | | |
| குவாதமாலா | 49 | | |

உங்கள் கடிதங்கள். . . . .



## " நான் அனுப்புவது கடிதம் அல்ல... என் உள்ளம்"



ஆசிரியருக்கு,

கோறளைப்பற்று பிரதேசத்தில் எமது தடாக நிறுவனம் மூலமாக பல திட்டங்களைச் செயற்படுத்துகின்றோம். அவற்றில் முக்கியமாக எழுத்தறிவுத் திட்டத்தினால் எழுத வாசிக்கத் தெரியாத அங்கத்தவர்களாக இருந்தவர்கள் இன்று எழுத வாசிக்கப் பழகியதுடன் தங்களுடைய ஒவ்வொரு பிரச்சினை களையும் தங்களுக்குள்ளேயே பொதித்துவையாது அவற்றை கூட்டங்களில் வெளியிட்டு, குழுக்களின் ஆலோசனை, கருத்துக்களைப் பெறுவதும், பத்திரிகை, கதைப் புத்தகங்கள் வாசிப்பதும் வெளியிடங்களுக்குச் சென்று தங்களுடைய அனுபவங்களைப் பெறுவதுமாக இவர்கள் தங்களுடைய கட்டுண்ட நிலைமையை விட்டு வெளியேறி யுள்ளார்கள். இவற்றிற்கு இன்னொரு தளமாக தடாக நிறுவனத்தில் செயற்பட்டு வரும் பெண்கள் குழு மிகவும் பக்கபலமாக அமைகின்றது. ஏனெனில் அன்று எழுத்தறிவுத் திட்டம் தங்களுக்கு பக்கபலமாக அமைந்தது போன்று இன்று பெண்கள் குழுவும் பக்கபலமாக அமைகின்றது.

இன்றைய பெண்கள் குழு தங்களுடைய பிரச்சினைகளை மட்டுமல்ல ஒவ்வொரு பெண்களின் பிரச்சினைகளையும் முன்னெடுத்து அலசி ஆராய்ந்து அவற்றுக்குரிய ஆலோசனைகளையும் அவற்றுக்குரிய தீர்வுகளையும் ஏதோ ஒரு வகையில் அளிக்கின்றது. இப் பெண்கள் குழுவின் நோக்கமாக 50ற்கு 50 வீதம் தாங்களும் அரசியலுக்கு வரவேண்டும் என்ற அவாவானது பெண்கள் முன்னேற்றத்தினை உறுதிப்படுத்தும் ஒரு செயற்பாடாகும். அதை இனப் பாகுபாடு இன்றி தமிழ் முஸ்லிம் பெண்கள் இணைந்து முன்னெடுத்துச் சென்று தங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்தும்போது பெண்களே இன்று குரல் கொடுப்பது கிராம மட்டத்தில் தங்கள் அன்றைய நிலைமையில் இருந்து இன்று மிகவும் வித்தியாசமான நிலையில் காணப்படுகின்றது. உதாரணமாக திகிலிவெட்டை கிராமத்தில் எழுத வாசிக்கத் தெரியாமல் இருந்த சுப்பிரமணிம் மகேஸ்வரி, வேலுப்பிள்ளை சீனிப்பிள்ளை என்பவர்கள் எழுத்தறிவுத் திட்டத்தில் எழுத வாசிக்கப் பழகி, அக்கிராமத்தில் தலைமைத்துவத்தை ஏற்று பல சங்கங்களிலும் தலைவராக செயற்படுகின்றார்.

இதுபோன்று இன்று பெண்கள் குழுவினர் ரூபவாகினி ஐ சனலிலும், சக்தி ரீவியிலும் தங்களுடைய ஆதங்கங்களை வெளிப்படுத்தியது எதிர்வரும் காலத்தில் இவர்களுடைய இலக்கை எய்துவதற்கு ஒரு படியாக அமைகின்றது. இவ்வாறு நடைபெறும் நிகழ்வுகளினால் வீட்டில் முடங்கியிருக்கும் ஒவ்வொரு பெண்களும் தங்களின் கலந்துரையாடல்களில் பெண்கள் திட்டங்களைப் பற்றிப் பேசுவதையும் காணக்கூடியதாக உள்ளது. இவை மேலும் வளர்ச்சியடைய இவ்வளர்ச்சிக்குப் பக்கபலமான ஆண்க ளையும் இணைத்துச் செயற்படுவது மேலும் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும் என்பது எனது கருத்தாகும்.

இவ்வண்ணம்

தெ. ஜெயசேகரம்

குறிப்பு: தாராளமாக! ஆர்

யாரை குறை கூறும் நீதி......தலைவியே வெளிப்படுத்தும்!
இணைந்த கரங்களின் செய்தி மடல் 9 இல்...

ஈராக் யுத்தத்துக்கு ஈழமக்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என வருந்திக் கொள்கிறீர்களா.........? இலங்கை யுத்த வரலாற்றில் தமிழர்கள் பட்ட துன்பத்தை யார் கண்டார்? அழிக்கப்பட்ட கிராமங்கள் எத்தனை? ஈழத்தாய் பெற்ற மகவு பிணத்தில் பால் குடித்தெழுந்த வரலாறு கேள்விப்படவில்லையா? வறுமையின் காரணமாய் மத்திய கிழக்கு நாடு நோக்கி சென்று உழைத்திட நினைத்த எம் நாட்டுப் பெண்களின் கற்பை விலை பேசிய வெளி நாட்டவர்களை அறியவில்லையா? பத்திரிகையில் பார்க்கவில்லையா? அப்போது எதிர்ப்பு போர்க்கொடி தூக்கவில்லையே? அப்போது உமக்கு எங்கே போய்விட்டது எம் மக்களின் பற்று? ஊர்வலம் எங்கே? அன்று பார்க்கவில்லையா? நீதியை?.......

29.07.03

தலைவியின் விழிப்புணர்சியுடன் இணையும்
எம். எம்.ஏ. என்........,
மூதூர்

குறிப்பு: தலைவி ஆரம்பித்து ஒரு வருடம்தான். அது சரி, தலைவியுடன் இணைந்த நாங்களெல்லோரும் ஒருபோதும் எதிர்ப்புப் போர்க்கொடி தூக்கவில்லை என்று உமக்கு யார் சொன்னார்கள்? அதைப் பற்றி ஒன்றுமே தெரியாமல் சடாரென்று விஷயங்களை தான்தோன்றித்தனமாக அனுமானித்துச் சொல்கிறீரே. அது ஏனோ? இணைந்த கரங்களின் அங்கத்தவர்கள் ஈழத்தவர்களுக்கு மட்டுமல்லாமல் மானுடத்துக்கே குரல் கொடுக்க வேண்டும். கிணற்றிலிருந்து வெளியே வாரும் தவளையாரே. ஆர்

தொடர்புகளுக்கு : 69, கோயில் வீதி, குருமன்காடு, வவுனியா. அச்சிடுவோர் : ஈகுவாலிடி கிரபிக்ஸ், 315 ஜம்பெட்டா வீதி, கொழும்பு 13. தொ.பே : 2389848

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org